**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.191/2017** P.W. 13

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | : மரு. திரு. செந்தில்குமார் | Caste: | |
| Father's Name . | | Calling: இணை இயக்குனர் | |
| Village | :. திருவாருர் | Religion: இந்து | |
| Taluk | : திருவாருர் | Age | . 62 |
| Date | : 12.07.2023 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.07.2023

(Accused are present.)

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் திருவாருர் இணை இயக்குனராக அரசு மருத்துவமனையில் இருந்து ஓய்வுப்பெற்று இருந்துவருகிறேன். நான் நாகப்பட்டினம் மருத்துவமனையில் கடந்த 11.09.2010 ம் வருடம் மருத்துவமனை கண்காணிப்பாளராக இருந்தபோது நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் திரு.செந்தில்குமார் என்பவர் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தார். அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். ஒரு மருத்துவர் என்ற முறையில் காயச்சன்றிதழைப்பார்த்து சொல்ல முடியும் என்ற முறையில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 11.09.2010 ம் தேதி மதியம் 2 மணியளவில் 50 வயது மதிக்கதக்க ஆண் பன்னீர்செல்வம் என்பவர் சில காயங்களுடன் சிகிச்சைக்கு வந்திருக்கிறார் அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. 1 வெளிக்காயங்கள் ஏதும் இல்லை. 2 . தலையின் இடது பக்கத்தில் 2x1 cm அளவுக்கு ஒரு வீக்கம் காணப்பட்டது. நோயாளியை தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்திருக்கிறார். நோயாளி அவரது சுய விருப்பத்தின் பேரில் தாமாக சென்று ரோகினி மருத்தவமனையில் சிகிச்சை பெற்றுகிறார். அவருக்கு மூளையில் எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் அடிப்படையில் அவரது இடது பிரைட்டல் போர்னின் ஒரு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதற்கான சிகிச்சை ரோகினி மருத்தவமனையில் அளிக்கப்பட்டிருந்தது. அந்த சிகிச்சை கோப்புக்களை பார்வையிட்டு அது ஒரு கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அந்த சான்றை டிஸ்சார்ஜ் சம்மரியின் பின்புறம் 15.07.2011 ல் வழங்கியிருக்கிறார். அந்த சான்று **அதசாஆ.13 ஆகும்.** போலிசார் மரு.செந்தில்குமாரை விசாரித்திருப்பார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கான சிகிச்சை அளிப்பதற்கு நாகப்பட்டினத்திலேயே போதி உபகரணங்கள் இருந்தது என்றால் சரியல்ல. தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு தான் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டது ரோகினி மருத்துவமனைக்கு அல்ல. சிடி ஸ்கேன் நாகப்பட்டினம் மருத்துவமனையிலேயே இருக்கும் என்றால் சரிதான். அவருக்கு சிடி ஸ்கேன்

நாகப்பட்டினம் மருத்துவமனையில் எடுக்கப்படவில்லை. எந்தவிதமான பரிசோதனையும் மேற்கொள்ளாமல் சிடி ஸ்கேன் எடுக்காமல் வழக்கிற்கு ஆதரவாக அவரை மேல் சிகிச்சைக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு சிகிச்சை அளிக்ககூடிய அளவிற்கு நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையிலேயே இருந்ததென்றும் மேல் சிகிச்சைக்கு அனுப்பவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்டவருக்கு மோட்டார் சைக்கிளில் இருந்து கீழேவிழுந்தாலோ அல்லது மரத்தில் இருந்து கீழேவிழுந்தாலோ மேற்சொன்னவாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்மந்தமாக நான் எந்த ஆவணத்தையும் பார்வையிடவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் ஆவணங்களை பார்வையிடாத நிலையில் தற்போது ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல. எக்ஸ்ரே உட்பட எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**